# சேலம் மத்திய மாவட்டக் கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம்,டிச.7-

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



சேலம் மத்திய மாவட்டக் கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (07.12.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 05.00 மணிக்கு தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச்செயலாளர் சீனிவாசன் தலைமையில், மத்திய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அருண்பிரசன்னா, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கேபிள்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் மாளிகை" யில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக்கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகரக் கழக இளைஞர் அணியின் துணை அமைப்பாளர்கள், ஒன்றியக் கழக, பகுதிக் கழக, பேரூர் கழகங்களின் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 14.12.2025 அன்று திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி குறித்து.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# ‘மனிதநேய உதய நாள்’ விழா கருத்தரங்கம் - மதினாவில் நடைபெற்றது!

## கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ. சுபேர்கான் தலைமையுரை!

மதினா, டிச.7-

சவுதி மேற்கு மண்டல திமுக அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.இஸ்மாயில் - அபு இன்பன் ஏற்பாட்டில் மனிதநேய உதய நாள் விழா கருத்தரங்கம் மதினாவில் நடைபெற்றது.





இந்நிகழ்வில் பங்கேற்று தலைமையுரையாற்றிய கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர். அ. சுபேர்கான் பேசுகையில் கடல் கடந்து அயல் நாட்டில் வாழும் தமிழர்களுக்காக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும், கழகத்தலைவர், திராவிட மாடல் ஆட்சி நாயகர், முதல்வர் அவர்களும் செய்த திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க "முதல்வர் அவர்கள் "புலம்பெயர் தமிழர் நல வாரியத்தை" கடந்த ஆண்டு தொடங்கிவைத்ததை நினைவு கூர்ந்ததுடன் புலம்பெயர் தமிழர் நலனுக்காக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டங்களான புலம்பெயர் தமிழர் குறித்த தரவுத் தளம் (Database). இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவக் காப்பீடு திட்டம்,

வெளிநாட்டுக்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை திட்டம்,

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு எனத் தனியாகச் சட்ட உதவி மையம், புலம்பெயர்ந்த தமிழர்கள், தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், ஊர் மக்களின் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் ‘எனது கிராமம்’எனும் திட்டம்.

முதலிய பல்வேறு திட்டங்களை பட்டியலிட்ட அவர். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-ம் நாளை ‘புலம்பெயர்ந்த உலகத் தமிழர் நாளாகக்’ கொண்டாடப்படும் என்ற முதல்வர் அவர்களின் அறிவிப்பை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். மேலும் தமிழர்கள் கடல் கடந்தவர்களாயினும், தேசம் தாண்டி புலம் பெயர்ந்தவர்களாயினும் தமிழர்களின் நலன் காக்கும் ஒரே இயக்கம் நம் திராவிட முன்னேற்ற கழகம் என்றுரைத்தார்.

பாசிசம் சிறுபான்மையின மக்களை வீழ்த்த எண்ணி கொண்டுவந்த என்.ஆர்.சி, சி.ஏ.ஏ., என்.பி.ஆர். மற்றும் புதிய வக்ப் திருத்தச்சட்டம் மற்றும் அடிப்படை வாக்குரிமையை பறிக்கத் துடிக்கும் SIR போன்ற எத்தகைய சதிகார திட்டமாக இருந்தாலும், சிறுபான்மையின மக்களின் பக்கம் நின்று உரிமைகளைக் காக்கும் துணிச்சல் மிக்க இளம் தலைவர் துணை முதல்வர் அவர்கள் தான் என்றதுடன், அவரின் பிறந்தநாள் விழாவினை பெருமைமிகு அயல்நாடு வாழ் தமிழர்களுடன் கொண்டாடுவதில் முகுந்த பெருமை கொள்வதாக தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் அயலக தமிழர்கள் என்றால், தமிழ் மொழி, பண்பாடு, மற்றும் பாரம்பரியத்தை உலகெங்கும் பரப்பும் தூதுவர்கள் நீங்கள். நீங்கள் வாழும் நாடுகளில் தமிழினத்தின் பெருமையை உயர்த்தும் பணியை நீங்கள் செவ்வனே செய்து வருகிறீர்கள்.

உங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் மொழியை கற்பித்து, அவர்களின் வேர்களை அறியச் செய்யுங்கள். தமிழ் பண்பாட்டின் அருமைகளை அவர்களுக்கு உணர்த்துங்கள். நம் முன்னோர்களின் தியாகங்களையும், போராட்டங்களையும் எடுத்துரைத்து, அவர்களை உயர்த்துங்கள். ஒற்றுமையே நமது பலம். தமிழ் மொழி, தமிழ் பண்பாடு, தமிழ் இனம் என்ற உணர்வோடு ஒன்றுபடுவோம். உலகெங்கும் தமிழினத்தின் பெருமையை பறைசாற்றுவோம் என கூறினார்.

மேலும் இக்கூட்டத்தில் சவுதி மேற்கு மண்டல தி.மு.க. அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.எம்.இஸ்மாயில்@ அபு இன்பன் அவர்கள் சிறப்புரையாட்ற்ற, விழாவில் மதினாவில் 42 ஆண்டுகளுக்கு மேலாக புனித உம்ரா பயணிகளுக்கு சேவை செய்து வரும் கழக முன்னோடிகள் ஜமால் ஜாகிர், அப்துல் சலாம் ஆகியோருக்கு பட்டயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நநிகழ்வில் குஜாமுதீன், ஆசிப் அலி சேட், சேக் மதுரை, கழக மகளிர் அணி நிர்வாகி நசூகா உள்ளிட்ட பலர் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.

---



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வாழப்பாடி பேருந்து நிலையம் முன்பு சேலம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர். அ. சீனிவாசன் அப்பாதுரை தலைமையில் கேக் வெட்டி, காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கி கொண்டாடபட்டது. இதில் பேரூர் செயலாளர் செல்வம், தெற்கு ஒன்றிய செயலாளர் மாதேஸ்வரன், பேரூர் துணை செயலாளர் ரஞ்சித் குமார், மாவட்ட பிரதிநிதி வீரேந்திரதுரை, மாணவரணி நிர்வாகிகள் விஜய், முருகன், மகேஷ் ராஜா, இளவரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை முத்துகிருஷ்ணன்
### டிசம்பர் 7 (1989)



திருச்சி மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

நங்கவரம் எனும் சிற்றூர் நாட்டிற்குத் தெரியாமல் இருந்த நிலையில், அங்குள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை கலைஞர் அவர்களிடம் சொல்லி, நங்கவரத்திற்கு கலைஞர் அவர்களை அழைத்து வந்து போராடி, அவர் மூலம் விவசாயிகள் துயர்துடைக்கச் செய்தவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிப் பழகியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

நெருக்கடி காலத்தில் ‘மிசா’ சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

14.12.2025 ஞாயிறு அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றிட

**கழக இளைஞர் அணிச் செயலாளர் –**

**மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்

# தி.மு.க. இளைஞர் அணி
# வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு

## தலைமைக் கழகம் அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றிட – கழக இளைஞர் அணிச் செயலாளரும், மாண்புமிகு துணை முதலமைச்சருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்;

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச்செயலாளர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, திருச்சி சிவா, எம்.பி., ஆ.இராசா, எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், எம்.பி., திருமதி கனிமொழி கருணாநிதி, எம்.பி., மு.பெ.சாமிநாதன், சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., மற்றும் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ்,எம்.பி., பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் – திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளர் மாண்புமிகு எ.வ.வேலு அவர்கள் வரவேற்பில்;

வருகிற 14.12.2025 ஞாயிற்றுக்கிழமை, மாலை 4.00 மணி அளவில், **திருவண்ணாமலை, ‘கலைஞர் திடலில்’ "வடக்கு மண்டல தி.மு.க.இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு"** நடைபெற உள்ளது.

இதில், அமைச்சர் பெருமக்களான மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு தா.மோ.அன்பரசன், மாண்புமிகு இரா.இராஜேந்திரன், மாண்புமிகு அர.சக்கரபாணி, மாண்புமிகு இராணிப்பேட்டை ஆர்.காந்தி, மாண்புமிகு மா.சுப்பிரமணியன், மாண்புமிகு பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு ஆவடி சா.மு.நாசர் – மாவட்டச் செயலாளர்கள்/பொறுப்பாளர்களான மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ., ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, மயிலை த.வேலு, எம்.எல்.ஏ., எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ், திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ., க.சுந்தர், எம்.எல்.ஏ., ஏ.பி.நந்தகுமார், எம்.எல்.ஏ., டிஎம்.கதிர்ஆனந்த், எம்.பி., க.தேவராஜி, எம்.எல்.ஏ., எம்.எஸ்.தரணிவேந்தன், எம்.பி., கே.எஸ்.மஸ்தான், எம்.எல்.ஏ., பொன்.கௌதம்சிகாமணி, ஆர்.இலட்சுமணன், எம்.எல்.ஏ., தா.உதயசூரியன், எம்.எல்.ஏ., வசந்தம் க.கார்த்திகேயன், எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.சிவலிங்கம், எம்.பி., டி.எம்.செல்வகணபதி, எம்.பி., ஆ.மணி, எம்.பி., முனைவர் பெ.பழனியப்பன், தே.மதியழகன், எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ.;

வடக்கு மண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான சி.என்.அண்ணாதுரை, எம்.பி., ஜே.ஜே.எபினேசர், எம்.எல்.ஏ., ஜெ.எல்.ஈஸ்வரப்பன், எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகரராஜா, எம்.எல்.ஏ., எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், கா.இராஜமார்த்தாண்டன், வி.வடிவேல், வி.பி.தாகப்பிள்ளை, க.ஆனந்த், செ.தினகரன், வீரபாண்டி ஆ.பிரபு, மு.மணிகண்டன், கே.வி.லோகேஷ், அ.யுவராஜ், ப.பிரகாஷ், ராஜாஅன்பழகன், ஆர்.டி.மதன்குமார், ம.கிரண், கே.சுரேஷ்குமார், கோல்டு டி.பிரகாஷ், எஸ்.அருண்ராஜ், ஆர்.சிவகுரு, சௌ.அருண்பிரசன்னா, எம்.ஜி.எஸ்.வெங்கடேஷ்வரன், டி.சி.ஆர்.எம்.தினேஷ்ராஜன், த.சுமன், வானவில் விஜய் – மாநகர அமைப்பாளர்களான ஜி.துர்காபிரசாத், பி.கே.எ.சத்தியபிரபு, ப.சுகுமார், யூ.ரவிக்குமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை–600018.
நாள் : 05–12–2025.

தலைமைக் கழகம்,
தி.மு.க.